**தலைப்பு 22 – நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துக்களை தெரிவித்தல் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கலாக உரிய வருடாந்த பொழிப்பறிக்கை 2022 மே 26 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துக்களை தெரிவித்தல் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கலாக அலுவலகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூன் 15 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக

ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு ஆணையாளர் அலுவலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் பின்வரும் கணக்காய்வு அவதானிப்புகளின் பிரகாரம் கடந்த வருடத்தின் நிதிக்கூற்றுகளுடன் இணங்கியிருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பந்திக்கான தொடர்பு |
|---|---|---|
| (i) | ஒப்பீட்டு பெறுமதிகளுக்குரிய சீராக்கங்களை மேற்கொள்ளல் | 1.6.1 (இ) |
| (ii) | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் | 1.6.1 (அ) |

(ஆ) கடந்த வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பான என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரை

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றுநிருப ஏற்பாடுகளுடன் இணங்காமை

அரசாங்க கணக்குகள் திணைக்களத்தினால் 2021 நவம்பர் 26 ஆந் திகதி வெளியிடப்பட்ட அரச கணக்குகள் வழிகாட்டல் இலக்கம் 2021/03 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அந்த தேவைப்பாட்டிலிருந்து விடுபட்ட சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வழிகாட்டியின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிகள் திறைசேரியின் புத்தகங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் திறைசேரியின் கணனி அச்சீடுகளை விட நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் ஆரம்ப மீதி ரூபா 392,925 இனால் குறைத்தும் ஆண்டினுள் கொள்வனவுகள் ரூபா 75,519 இனால் அதிகரித்தும் கைத்தவிர்ப்பு ரூபா 3,500 குறைவாகவும் பதிவு செய்யப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டினுள் முதற்தடவையாக சிகாஸ் கட்டமைப்பினுள் சொத்துக்கள் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் 2021 ஆம் ஆண்டின் கொள்வனவுகள் 2021.12.31 ஆந் திகதியில் உள்ளபடியான மீதியாக உள்ளடக்கப்பட்டுள்ளது. அதன் காரணமாக வேறுபாடொன்று உருவாகியுள்ளது. | நிதிக் கூற்றுக்களினதும் திறைசேரியின் கணனி அச்சீடுகளினதும் உள்ளடக்கப் பட்டுள்ள தகவல்கள் இணக்கம் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | வழிகாட்டியின் 06 ஆம் பந்தியின் பிரகாரம் ஏசீஏ-6 மாதிரிக்காக நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்று - SA-82 பயன்படுத்தப்பட வேண்டியதாக காணப்பட்ட போதிலும் அதற்காக ஏசீஏ-6 மாதிரிக்காக சொத்துக்களின் பதிவேடு பட்டியலொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள மாதிரிகளில் ஏசீஏ-6 மாதிரியில் காண்பிக்கப்பட்டுள்ளவாறு சிகாஸ் வலைதளத்தின் மூலம் உருவாக்கப்பட்ட நிதியல்லாத சொத்துக்கள் கூற்று இணைக்கப்பட்டுள்ளது. | உரிய வழிகாட்டல்களின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் அறிக்கையிடும் அடிப்படையின் கீழ் பந்தி இலக்கம் 07 இல் ‘‘2021 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களில் மாதிரிகளில் மேற்கொள்ளப்பட்ட வேறுபாடுகளின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டுக்கான ஒப்பீட்டு பெறுமதிகளில் உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன’’ என குறிப்பிடப்பட்டு கடந்த வருடத்தின் பெறுமதிகள் மாற்றப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய சீராக்கங்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | 2020 ஆம் ஆண்டிற்கான பெறுமதிகளில் உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அச்சீராக்கங்கள் நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பது தவறவிடப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### (அ) மீண்டெழும் செலவினங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் ரூபா 79,780 ஆன பத்திரிகை செலவினத்தினுள் எதிர்வரும் வருடங்களில் கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்த்துள்ள பத்திரிகைகளுக்காக செலுத்தப்பட்ட ரூபா 46,690 உள்ளடங்கியிருந்ததுடன் அப்பெறுமதி மீளாய்வாண்டின் செலவினத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த காரணத்தினால் ஆண்டின் மொத்த மீண்டெழும் செலவினம் மற்றும் மொத்த செலவினம் ரூபா 49,690 இனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் பத்திரிகைகளில் விநியோகிப்பதற்கு முன்னைய வருடங்களில் கொடுப்பனவுகள் மேற்கொள்ள வேண்டியமையால் 2021 ஆம் ஆண்டின் திசெம்பர் மாதத்தின் பங்களிப்பு பணம் செலுத்தப்பட்டுள்ளது. அதன் காரணமாக உங்களின் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வேறுபாடு ஏற்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது உரிய காலப்பகுதிக்குரிய தகவல்கள் உள்ளடக்கப்பட வேண்டும். |

**(ஆ) மூலதன செலவினங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டினுள் ரூபா 75,519 பெறுமதியான சொத்துக்களின் சுவீகரிப்புக்கள் நிதிச் செயலாற்றல் கூற்றின் மூலதன சொத்துக்களின் சுவீகரிப்புக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் திறைசேரி கணனி அச்சீடுகளின் SA-82 இன் கொள்வனவுகளின் கீழ் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டினுள் முதற்தடவையாக சிகாஸ் கட்டமைப்பில் சொத்துக்கள் உள்ளடக்கப்பட்டமையால் 2021 ஆம் ஆண்டின் போது கொள்வனவுகள் 2021.12.31 ஆந் திகதியில் உள்ளபடியான இறுதி மீதியாக உள்ளடக்கப்பட்டுள்ளது. அதனால் அது திறைசேரியின் கணனி அச்சீடுகளின் கொள்வனவுகளின் கீழ் உள்ளடக்கப்படவில்லை. | நிதிக்கூற்றுக்கள் மற்றும் திறைசேரியின் கணனி அச்சீடுகளில் உள்ளடக்கப் பட்டிருந்த தகவல்கள் இணங்க வேண்டும். |

**(இ) அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான திறைசேரியின் கணனி அச்சீடுகளின் பிரகாரம் கடன் மீதியானது ரூபா 3,436,555 ஆக காணப்பட்டதுடன் அத்திகதியில் உள்ளபடியான தனிப்பட்ட மீதி வகைப்படுத்தல் பொழிப்பின் கூட்டுத்தொகை ரூபா 3,399,798 ஆக காணப்பட்டதுடன் ரூபா 36,757 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. அந்த வேறுபாட்டினை தீர்ப்பனவு செய்வதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | அந்த வேறுபாட்டினை திருத்துவதற்காக அரச கணக்குகள் திணைக்களத்திலிருந்து அறிவுரை கோரப்பட்டுள்ளதுடன் இதுவரையிலும் அதற்கு உரிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. | கணக்குகளுக்கு இடையிலான வேறுபாடுகளை இனங்கண்டு திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 செலவுகள் முகாமைத்துவம்**

**(அ) நிதியேற்பாடு எஞ்சுதல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியான செலவினங்கள் மதிப்பிடப்பட்டு வருடாந்த செலவின மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் செயற்படாமையால் 02 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 300,000 ஆன மொத்த நிதியேற்பாடும் பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | 2021 ஆம் ஆண்டினுள் அலுவலக கட்டிடத்தில் மேற்கொள்ளப்பட்ட சிறிய பழுதுபார்த்தல்கள் கட்டிடத்தின் உரிமையாளரால் மேற்கொள்ளப்பட்டமையால் செலவின விடயம் 1303 இன் கீழ் நிதியேற்பாடு முழுமையாக எஞ்சியிருந்ததுடன் கொவிட் தொற்று நோய் நிலைமை காரணமாக உத்தியோகத்தர்களின் பயிற்சி செயலமர்வுகளில் பங்குபற்றியிராமையாலும் செலவின விடயம் 2401 இன் கீழான நிதியேற்பாடும் முழுமையாக எஞ்சியிருந்தது. | செலவினங்களை சரியாக மதிப்பீடு செய்து வருடாந்த செலவின மதிப்பீடுகள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ii) | அரச கணக்குகள் திணைக்களத்தினால் 2021 நவம்பர் 26 ஆந் திகதி வெளியிடப்பட்ட அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 2021/03 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.4 ஆம் பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு செலவின விடயத்திற்குமான மொத்த தேறிய நிதியேற்பாடு மற்றும் உள்ளபடியான செலவினம் ஆகியவற்றுக்கிடையேயான வேறுபாடு, செலவின விடயங்களின் தேறிய நிதியேற்பாட்டின் 5 சதவீதம் | 2020 ஆம் ஆண்டு வரையிலும் சம்பளம் மற்றும் படிகளுக்காக செலவின விடயங்களின் நிதியேற்பாட்டின் சேமிப்புக்கான காரணங்கள் குறிப்பிடப்பட்டிராமையால் 2021 ஆம் ஆண்டிற்காக அந்த செலவின விடயங்களின் சேமிப்புக்களுக்குரிய காரணங்கள் குறிப்பிடப்படவில்லை. எதிர்வரும் வருடங்களுக்காக கணக்குகளை தயாரிக்கும் போது உரிய அறிவுரைகளின் பிரகாரம் | உரிய வழிகாட்டல்களின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அல்லது ரூபா 10,000 ஆகிய இரண்டில் கூடிய தொகையை விட அதிகரிக்கும் எனில் அவ்வேறுபாட்டிற்குரிய காரணங்கள் ஏசீஏ-2(ii) மாதிரியில் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் 03 செலவின விடயங்களில் ரூபா 2,996,183 ஆன சேமிப்புக்கள் தொடர்பில் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | |
| (iii) | மூலதன செலவின விடயம் மற்றும் 11 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 16,655,000 கூட்டுத்தொகையான நிதி ஏற்பாட்டில் ரூபா 4,084,881 தொகை எஞ்சியிருந்தது. அந்த சேமிப்புக்கள் குறித்த செலவின விடயத்திற்கான தேறிய நிதியேற்பாட்டில் 14 சதவீதம் முதல் 90 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டன. | 2021 ஆம் ஆண்டினுள் அலுவலகத்தின் சில உத்தியோகத்தர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்றமை, சம்பளமற்ற மற்றும் அரைச் சம்பளத்துடனான விடுமுறைகளை பெற்றுக் கொள்வதற்காக செலவின விடயம் 1001(11) இன் மற்றும் செலவின விடயம் 1003 இன் நிதியேற்பாடு எஞ்சியிருந்ததுடன் நாட்டில் நிலவிய கொவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக ஆண்டினுள் எதிர்பார்த்த செலவினங்கள் கருத்திற்கொள்ளக் கூடிய அளவில் குறைவடைந்தமை ஏனைய மீண்டெழும் செலவின விடயங்களில் நிதியேற்பாடுகள் எஞ்சியமைக்கு அடிப்படையாக தாக்கம் செலுத்தியிருந்தது. மூலதன செலவின விடயங்களை மட்டுப்படுத்துவதற்காக தேசிய வரவு செலவுத் திட்டக் கணக்கில் வாய்மொழி மூலமான அறிவுரைகளின் படி எதிர்பார்த்த கொள்வனவுகள் கைவிடப்பட்டமையால் செலவின விடயம் 2102 இன் கீழான நிதியேற்பாடு எஞ்சியிருந்தது. | செலவினங்களை சரியாக மதிப்பீடு செய்து வருடாந்த செலவின மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டியமை. |

| | | |
|---|---|---|
| (iv) ஆண்டிற்குரிய மதிப்பிடப்பட்ட மூலதன செலவினம் ரூபா 1,357,000 ஆக காணப்பட்டதுடன் நிதியேற்பாடு பெறுவனவு ரூபா 550,000 ஆகும். ஆண்டின் உள்ளபடியான செலவினம் ரூபா 75,519 ஆக காணப்பட்டதுடன் அது மதிப்பிடப்பட்ட தொகையின் 5.6 சதவீதமாக காணப்பட்டதுடன் நிதியேற்பாட்டின் பயன்பாடானது நிதியேற்பாட்டின் பெறுவனவுகள் 13.7 சதவீதம் ஆகும். | மூலதன செலவினங்களை மட்டுப்படுத்துவதற்காக திறைசேரியிலிருந்து கிடைத்த வாய்மொழி மூலம அறிவுரைகளின் பிரகாரம் உத்தேச கொள்வனவுகள் மட்டுப்படுத்தப்பட்டது. | செலவினங்களை சரியாக மதிப்பீடு செய்து வருடாந்த செலவின மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டியமை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடுதல்

#### 3.1.1 பெறுகைகள் திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பெறுகைகள் திட்டத்தின் எதிர்பார்த்த காலஎல்லையினை குறிப்பிடும் போது பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.2 வழிகாட்டியின் பிரகாரம் பெறுகை ஆரம்பம் முதல் இறுதி வரையிலும் கிரமமான முறையில் உரிய காலப்பகுதியினுள் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக 2021 சனவரி முதல் திசெம்பர் வரையிலும் என மொத்த காலப்பகுதிக்கும் பெறுகைகள் திட்டத்தில் | எதிர்வரும் வருடங்களுக்கான பெறுகைகள் திட்டத்தை தயாரிக்கும் போது உரிய தேவைப்பாடுகளுக்கு இணங்க தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் குறித்த காலப்பகுதிகள் தனித்தனியாக காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஆ) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.3 வழிகாட்டியின் பிரகாரம் கிரய மதிப்பீட்டினை தயாரித்து அதனை பெறுகைகள் திட்டத்தில் உள்ளடக்க வேண்டிய போதிலும் அலுவலகத்தின் கணனிமயப்படுத்தல் பெறுகைகள் பணி திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் அதன் மதிப்பிடப்பட்ட கிரயம் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | அலுவலகத்தினை கணனி மயப்படுத்துவதற்காக விலைகளின் மதிப்பீடொன்றினை பெற்றுக் கொள்வதற்குரிய பணி தொடர்பில் அறிவுடைய தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவர் இல்லாதிருந்தமையால் மதிப்பிடப்பட்ட கிரயமானது திட்டத்தில் உள்ளடக்க முடியாதிருந்தது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.3 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.2 செயலாற்றல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 சனவரி 01 திகதியளவில் விசாரணை மேற்கொள்வதற்கும் அறிக்கையிடுவதற்கும் திட்டமிடப்பட்ட கடந்த வருடத்தில் எஞ்சியிருந்த 828 முறைப்பாடுகள் மீளாய்வாண்டினுள் நிறுவனத்திற்கு கிடைத்த முறைப்பாடுகளாக 1,274 எண்ணிக்கையானவற்றை ஆண்டினுள் விசாரணை செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த எண்ணிக்கையாக 2,102 குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் ஆண்டினுள் 1174 முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளபடியான | அதில் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளிவிபரங்கள் சரியானதாகும். | குறைப்பாடுகளை துரிதமாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

விசாரணைகளை மேற்கொள்வதற்கும் மேலும் 928 முறைப்பாடுகளை அறிக்கையிடுவதற்கும் எஞ்சியிருந்தது.

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 கொண்ட நிதியமைச்சின் சுற்றறிக்கையின் 11.1 ஆம் பந்தியின் உப பந்தி இலக்கம் 06 இன் பிரகாரம் நாளதுவரையாக பொருள் மெய்மையாய்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டிராததுடன் இதுவரையிலும் அப்பணிகள் நிறைவு செய்யப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் அதன் அறிக்கையை துரிதமாக தங்களுக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 4. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 32 ஆக காணப்பட்டதுடன் உள்ளபடியான பதவியணி 21 ஆக காணப்பட்டமையால் 11 வெற்றிடங்கள் நிலவின. | 2021 ஆம் அண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் மற்றும் உள்ளபடியான பதவியணி தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் சரியானது என்பதுடன் அதன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியானது 32 ஆக காணப்பட்டதுடன் உள்ளபடியான பதவியணி 21 ஆகவும் வெற்றிடங்களின் எண்ணிக்கையானது 11 ஆகவும் நிலவியது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |